முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1220

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

31.01.2023, செவ்வாய்கிழமை

1. அறமாக வாழுகின்ற அரங்கனே
அன்னதான சேவையாற்றும் தேசிகனே
வரம்தந்து சுப்ரமணியப்பெருமான் யானும்
வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் தை மாதம் 17 ம் நாள் 31.01.2023, செவ்வாய்கிழமை)
2. ஆசிதனில் அரங்கனின் சக்தி இன்னும் பெருகும்
அற்புதமாய் அரங்கன் தர்மம் வளரும்
வாசிவென்ற ஞானியர் படைகளோடு
வல்லமை கூடி அரங்கன் தொண்டர்களுக்கும்
3. தொண்டர்களுக்கும் வாசியோகம் வசமாகி
வையகத்தில் வாழும் காலமே எந்தனைக் காணும்
காணுகின்ற அற்புதங்கள் அரங்கேறி
கலியுகத்தில் அரங்கன் தொண்டர்களெல்லாம் ஞானிகளாகக்கூடும்
4. கூடுகின்ற இந்த அற்புதங்கள் குறைவின்றி
குவலயத்தில் அரங்கேறும் காலம் கனிந்துவர
நாடெங்கிலும் உள்ள மக்கள் எல்லாம்
ஞானம் தேடி அரங்கன் ஓங்காரக்குடில் நோக்கி
5. குடில் நோக்கி வந்தால் போதுமப்பா
குவலயத்தில் ஞான ஆட்சி மலரக்கூடும்
இடரான மனிதர்களின் ஆட்சிகளெல்லாம்
இவ்வுலகை விட்டு விலகியே மகான்கள் ஆட்சி
6. ஆட்சியதும் அற்புதமாய் அரங்கன் தேடலில்
ஆற்றல்பட அவர் தொண்டர்களைக்கொண்டே மாற்றங்காணும்
இடரைவெல்ல அரங்கனுக்குள் யானிருந்து
இந்த உலகத்தை கவனித்து வருவதாலே
7. ஆதலால் உலகமெங்கும் மாற்றமதும்
அரங்கன் கொள்கையாலும் தர்மத்தாலும்
பூதலமே நிறைவு கொண்டு பெருமாற்றமாக
புண்ணியவசத்தால் கண்டு ஞான ஆட்சியாக மாறக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–